இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா
இறுதிப் பரீட்சை 2004/**2005**
**ESP 1110 -** ஆரம்பக் கல்வி
காலம் : மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 29.07.2006 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

பகுதி **I** இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி **II** இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. ஆரம்ப பாடசாலை கலைத்திட்டத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ள தத்துவவியலாளர் ஒருவரின் கருத்துக்களை எழுதுக.

2. இலங்கை மாணவர்களின் பங்குபற்றுவதற்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு, அரசு மூலம் எடுக்கப்பட்டுள்ள உபாயமுறைகள் இரண்டினை(02) உதாரணங்களுடன் விளக்குக.

3. 1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட, இலங்கையின் ஆரம்ப பாடசாலை கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை சுருக்கமாகத் தருக.

4. (i) ஆரம்ப நிலை மாணவர்கள் கற்றலுக்கு பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள் மூன்றினை(03) பெயரிடுக.

   (ii) நீர் குறிப்பிட்ட நுட்பமுறைகளுக்கிடையில் ஒன்றைத் தெரிவுசெய்து, முதன்மைக்கட்டம் ஒன்றிலுள்ள மாணவர்கள், கற்றலுக்காக இந்நுட்பமுறைகளைப் எவ்வாறு பயன்படுத்துகின்றார்கள் என்பதை சுருக்கமாக விளக்குக.

5. தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கல்வி சீர்த்திருத்தங்களின் அடிப்படையில், மாணவர்கள் ஆரம்பபாடசாலை பருவத்தில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அடிப்படை தேர்ச்சிகள் ஐந்தைக்(05) குறிப்பிடுக.

6. பாடசாலைக்கும் வீட்டுக்குமிடையிலான நிரந்தரதொடர்பினை ஏற்படுத்துவதற்கு ஆரம்ப ஆசிரியர் ஒருவர் மூலம் நிறைவேற்றக்கூடிய கடமைகள் மூன்றைக்(03) குறிப்பிடுக.

7. இலங்கையில் ஆரம்ப பாடசாலைகளில் தற்போது பயன்படுத்தப்படும் கணிப்பீட்டு செயன்முறைகளின் இயல்புகள் இரண்டினை விமர்சன ரீதியாக பரீட்சிக்க.

8. (i) இலங்கையில் ஆரம்பகல்வி தொடர்பாக சேவையில் ஈடுபடும் "மேற்பார்வை குழு" விலுள்ள (Supervising Personnel) உத்தியோகத்தர்கள் நால்வரைப்(04) பெயரிடுக.

   (ii) இலங்கை ஆரம்ப கல்வி தொடர்பாக சேவையைத் திட்டமிடும் "மேற்பார்வைக்குழுவின்" பொறுப்புக்களை சுருக்கமாக விளக்குக.

(8 x 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. ஆரம்பக்கல்வியை வலிமைப்படுத்துவதற்கு யுனெஸ்கோ ஒழுங்கமைப்பின் (UNESCO) பங்களிப்பினை பரீட்சிக்க.

(20 புள்ளிகள்)

10. "ஆரம்ப ஆசிரியர் கல்வி, ஆசிரியர் பயிற்சி தொடர்பாக முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு முக்கிய தேவை உள்ளது".

(i) ஆரம்ப ஆசிரியரின் பயிற்சிக்காக இலங்கை அரசு எடுத்துள்ள உபாயங்களை விபரிக்க.

(12 புள்ளிகள்)

(ii) இவ் உபாய முறைகளின் குறை நிறைகளை ஆராய்க

(8 புள்ளிகள்)

11. 1997 ஆரம்பகல்விச் சீர்த்திருத்தங்களில் பின்வரும் பிரிவுகளை விமர்சன ரீதியாகபரீட்சிக்க.

(i) கலைத்திட்டப் பொருள்களின் தரம்
(ii) அடிப்படை வசதிகளின்(Infrastructure) தரம்
(iii) கற்றல் - கற்பித்தல் செயன்முறை

(20 புள்ளிகள்)

12. உங்கள் பாடசாலை முதன்மை கட்டம் ஒன்று மாணவர்களுக்கு நீங்கள் கற்பிப்பதாகக் கருதிக்கொண்டு,

(i) அம்மாணவர்களின் விருத்திசார் பண்புகள் தொடர்பாக சிறு அறிக்கை ஒன்றைத் தயாரிக்க.

(12 புள்ளிகள்)

(ii) வகுப்பறையினுள் மாணவர்களின் கற்றலை எளிது படுத்துவதற்கு மாணவர்களின் விருத்தி சார் பண்புகள் தொடர்பாக உங்களது அறிவை எவ்வாறு பயன்படுத்திக் கொளவீர்கள் என்பதை விளக்குக.

(8 புள்ளிகள்)

13. "ஆரம்ப பாடசாலை மாணவர்கள் கற்பதற்கு ஊக்குவிக்கக்கூடிய சாதகமான சமூக சூழ்நிலையை ஏற்படுத்தல் தொடர்பாக ஆரம்ப பாடசாலை ஆசிரியர் கவனம் செலுத்துதல் அனவசியமாகும்"

(i) முதன்மைக் கட்டம் இரண்டில் வகுப்பறையினுள் சாதகமான சமூக சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய முறைகளை விளக்குக

(10 புள்ளிகள்)

(ii) உங்கள் வகுப்பறையினுள் அவ்வாறான சூழ்நிலையை ஏற்படுத்துகையில் நீர் எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகளை விபரிக்க.

(10 புள்ளிகள்)

14. பின்வரும் தலைப்புகளில் இரண்டு(02) தொடர்பாக சிறு குறிப்புகள் எழுதுக.

(i) ஆரம்ப கலைத்திட்ட முகாமைத்துவம்
(ii) கணிப்பீட்டு முறைகளில் நவீன செல்நெறிகள்
(iii) ஆரம்ப பாடசாலை கலைத்திட்டத்தினைச் செயற்படுத்துகையில், அதிபரின் வகிபங்கு.

(பதிப்புரிமை பெற்றது)